# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 160/ந/2024, நாள் 20.11.2025

வே.கணபதி பாலசுப்பிரமணியன்,
கடையநல்லூர்,
தென்காசி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
தென்காசி மாவட்டம். – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டு கீழத்தெரு, எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன், என்பவரது 17.08.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.08.2024 அன்று பெறப்பட்டு, 160/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டு கீழத்தெரு, எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன், என்பவரது 17.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“தமிழகத்தில் கடந்த 2022ம் ஆண்டு நகராட்சி தேர்தல் சிறப்பாக நடந்து முடிந்து வெற்றி பெற்ற வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் போது “நானோ அல்லது எனது கணவன்/மனைவியோ அல்லது இரத்த சம்பந்தமான உறவுகளோ நகராட்சியில் இலாபம் தரக்கூடிய எந்த ஒரு ஒப்பந்தத்திலும் அல்லது ஏலத்திலும் அதிகார வரம்பை மீறி செயல்பட மாட்டேன் என்று உறுதி அளித்து பதவியேற்றுக் கொண்டனர்.” ஆனால் கடையநல்லூர் நகராட்சியில் இந்த உறுதிமொழி மீறப்பட்டு வார்டு உறுப்பினர்களின் கணவர்கள் ஒப்பந்ததாரர்களாக பல இலட்சம்

ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொண்டதால் அப்பட்டமான அதிகார துஷ்பிரயோகம் நடந்துள்ளது. கடையநல்லூர் நகராட்சியில் இரண்டாவது வார்டு கவுன்சிலராக செயல்பட்டு வருபவர் கடையநல்லூர், கிருஷ்ணாபுரம், 158சி6 கற்பக சுந்தரவிநாயகர் கோவில் தெருவை சேர்ந்த பூங்கோதை இவரது கணவர் கருப்பையா தாஸ், இவர் கடையநல்லூர் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பல லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொண்டுள்ளார்.

இதுபோல கடையநல்லூர் நகராட்சியில் மூன்றாவது வார்டு கவுன்சிலராக வெற்றிபெற்று செயல்பட்டு வருபவர் கடையநல்லூர், கிருஷ்ணாபுரம், 42D17 கருப்பசாமி கோவில் வடக்கு தெருவை சேர்ந்த சுபா. இவர் கணவர் ராஜேந்திர பிரசாத். இவர் கடையநல்லூர் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பல இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 50ல் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில் மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்து கொள்ள கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 32(1)(e) ல் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில் மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்து கொள்ள கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இது குறித்து நகராட்சி சட்ட விதிமுறைகளையும் தங்களது உறுதி மொழியையும் மீறி செயல்பட்ட இரண்டாவது வார்டு கவுன்சிலர் பூங்கோதை மற்றும் மூன்றாவது வார்டு கவுன்சிலர் சுபா ஆகியோரை பதவி நீக்கம் செய்யுமாறு நான் கடந்த 15.07.2024 அன்று கடையநல்லூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு மனு அளித்தேன். ஆனால் நகராட்சி ஆணையர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே விதிமுறைகளை மீறி செயல்பட்ட 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் பூங்கோதை 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் சுபா ஆகியோரை பதவி நீக்கம் செய்ய உத்திரவிடுவதுடன் இதற்கு உடந்தையாக செயல்பட்ட நகராட்சி ஆணையாளர் மீதும் நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்". எனதெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து கடையநல்லூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 26.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.2696/2024/இ1, நாள் 13.06.2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

“மனுதாரர் திரு.வி. கணபதி பாலசுப்பிரமணியன், என்பவர் தன்னுடைய மனுவில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 50–ல் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில் மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்து கொள்ள கூடாது என்பதை சுட்டி காட்டியுள்ளார்.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, கடையநல்லூர் நகராட்சி இரண்டாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. பூங்கோதை அவர்களின் கணவர் திரு.மு.கருப்பையாதாஸ், மற்றும் மூன்றாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. சுபா அவர்களின் கணவர் திரு.மு.ராஜேந்திர பிரசாத், ஆகியோர்கள் 2018–19 முதல் ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்து வெளிப்படையான இணையதள ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு ஒப்பந்த பணிகள் மேற்கொண்டு வந்தார்கள்.

கடையநல்லூர் நகராட்சி கடித எண்.2696/2024/இ1, நாள் 06.01.2025–ன்படி கடையநல்லூர் நகராட்சி இரண்டாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.மு.பூங்கோதை மற்றும் மூன்றாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ரா.சுபா ஆகியோருக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1998 பிரிவு 32(1) (e) ல் தெரிவித்துள்ளபடி 15 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக விளக்கம் சமர்ப்பிக்க கேட்டு 06.01.2025 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்படி, இரண்டாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பூங்கோதை அவர்களின் கணவர் திரு.மு.கருப்பையாதஸ், மற்றும் மூன்றாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சுபா அவர்களின் கணவர் திரு.மு.ராஜேந்திர பிரசாத், ஆகியோர் தங்களின் ஒப்பந்ததாரர் பதிவினை இரத்து செய்யக்கேட்டு கடிதங்கள் வரப்பெற்றது. அதனடிப்படையில் கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2696/2024/இ1, நாள் 31.03.2025 அறிவிப்பு கடிதத்தின்படி மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்த பதிவு இரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது இந்நகராட்சியில் இரண்டாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பூங்கோதை அவர்களின் கணவர் திரு.மு.கருப்பையாதாஸ், மற்றும் மூன்றாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சுபா அவர்களின் கணவர் திரு.மு.ராஜேந்திர பிராசாத், ஆகியோர்கள் ஒப்பந்ததாரராக இல்லை என்ற விபரத்தினை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது". என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கடையநல்லூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–வது எதிர்மனுதாரர்களான கடையநல்லூர் நகராட்சி 2–வது வார்டு உறுப்பினர், 3–வது வார்டு உறுப்பினர் ஆகியோர்களை 17.06.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.06.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன், என்பவர் தனது உடல் நிலை மற்றும் வயது முதிர்வு காரணமாக 17.06.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என தனது 16.06.2025 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

6) 2–ஆம் எதிர்மனுதாரர்களான 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. பூங்கோதை மற்றும் 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. சுபா ஆகியோர் 17.06.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7) எதிர் மனுதாரராகிய கடையநல்லூர் நகராட்சி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திரு. S.ரவிச்சந்திரன் என்பவர் 17.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

மனுதாரர் திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன் என்பவர் தன்னுடைய மனுவில் நகராட்சி மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய நகராட்சி பணிகளை மேற்கொள்வதற்கான அல்லது மேற்கொண்டு நடத்திடும் ஒப்பந்ததாரராக இருந்தால் அவரை தகுதி நீக்கம் செய்ய தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 32(1)(e)ல் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்து, கடையநல்லூர் நகராட்சி இரண்டாவது வார்டு உறுப்பினர் திருமதி. பூங்கோதை அவர்களின் கணவர் திரு. கருப்பையாதாஸ் மற்றும் மூன்றாவது வார்டு உறுப்பினர் திருமதி. சுபா அவர்களின் கணவர் திரு. ராஜேந்திர பிரசாத், ஆகியோர்கள் நகராட்சி பணிகளை ஒப்பந்ததாரராக இருந்து நடத்தியதால் இவர்களை தகுதி நீக்கம் செய்ய 15.07.2024–ல் மனு அளித்திருந்தார்.

மேற்படி இரண்டாவது வார்டு உறுப்பினர் திருமதி. பூங்கோதை அவர்களின் கணவர் திரு. கருப்பையாதாஸ் மற்றும் மூன்றாவது வார்டு உறுப்பினர் திருமதி. சுபா அவர்களின் கணவர் திரு. ராஜேந்திர பிரசாத், ஆகியோர் நகராட்சி பணிகளை மேற்கொள்ள 2018–19ல் ஒப்பந்ததாரராக பதிவு செய்து வெளிப்படையான இணையதள ஒப்பந்தபுள்ளிகளில் கலந்து கொண்டு ஒப்பந்த பணிகளை மேற்கொண்டு வந்தனர். மனுதாரரின் புகாரின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 32 (1) (e)–ன் கீழ் கடையநல்லூர் நகராட்சி இரண்டாவது வார்டு உறுப்பினர் திருமதி. மு. பூங்கோதை மற்றும் மூன்றாவது வார்டு உறுப்பினர் திருமதி. ரா. சுபா ஆகியோர்களுக்கு 15 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக விளக்கம் சமர்ப்பிக்கக் கோரி 06.01.2025 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனைத்தொடர்ந்து கடையநல்லூர் நகராட்சியின் இரண்டாவது வார்டு உறுப்பினர் திருமதி. பூங்கோதை அவர்களின் கணவர் திரு. மு. கருப்பையாதாஸ் என்பவர் 29.03.2025 நாளிட்ட கடிதம் மூலமும் மூன்றாவது வார்டு உறுப்பினர் திருமதி. சுபா அவர்களின் கணவர் திரு. மு. ராஜேந்திர பிரசாத் என்பவர் 20.03.2025 நாளிட்ட கடிதம் மூலமும் தங்கள் ஒப்பந்ததாரர் பதிவினை இரத்து செய்யக்கோரி கோரியிருந்தனர். அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்ததாரர்களின் பதிவு 31.03.2025–ல் இரத்து செய்யப்பட்டது.

தற்போது இந்நகராட்சியின் இரண்டாவது வார்டு உறுப்பினர் திருமதி. பூங்கோதை அவர்களின் கணவர் திரு. மு. கருப்பையாதாஸ் மற்றும் மூன்றாவது வார்டு உறுப்பினர் திருமதி. சுபா அவர்களின் கணவர் திரு. மு. ராஜேந்திர பிரசாத் ஆகியோர்கள் 4 ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் தலா 20 பணிகள் எடுத்து டிசம்பர் 24–ல் பணிகளை முடித்துள்ளனர். 31.03.2025ல் ஒப்பந்ததாரருக்கான பதிவு இரத்து செய்யப்பட்டதால், தற்போது ஒப்பந்ததாரராக இல்லை என்ற விபரத்தினை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரர் திரு. வே. கணபதி பாலசுப்பிரமணியன் மற்றும் 2–வது எதிர்மனுதாரர்களான 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினரான திருமதி. பூங்கோதை மற்றும் 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. சுபா ஆகியோர் 17.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாததால் அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக 29.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் மற்றும் 2–ஆம் எதிர்மனுதாரர்களுக்கும் 08.08.2025 அன்று அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9) மனுதாரர் திரு. வே. கணபதி பாலசுப்பிரமணியன் 29.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையிலும் ஆஜராக இயவில்லை என்பதை தெரிவித்து மாண்பமை நடுவம் எடுக்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன் என தனது 01.09.2025 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்.

10) 2–வது எதிர்மனுதாரர்களான 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்திருமதி. பூங்கோதை மற்றும் 3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. சுபா ஆகியோர் 29.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையிலும் ஆஜராகவில்லை. இதுகுறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு எவ்வித தகவலும் அவர்களிடமிருந்து பெறப்படவில்லை. மேற்படி நகர்மன்ற உறுப்பினர்களுக்கு இரண்டுமுறை வாய்ப்பளித்தும், விசாரணையில் கலந்து கொள்ளாததை இம்முறைமன்ற நடுவம் கண்டிக்கிறது.

11) எதிர் மனுதாரராகிய கடையநல்லூர் நகராட்சி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திரு. S.ரவிச்சந்திரன் என்பவர் 29.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:-

"மனுதாரர் திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன் என்பவர் தன்னுடைய மனுவில் நகராட்சி மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய நகராட்சி பணிகளை மேற்கொள்வதற்கான அல்லது மேற்கொண்டு நடத்திடும் ஒப்பந்ததாரராக இருந்தால் அவரை தகுதி நீக்கம் செய்ய தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 32(1)(e)ல் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்து, கடையநல்லூர் நகராட்சி இரண்டாவது வார்டு உறுப்பினர் திருமதி. பூங்கோதை அவர்களின் கணவர் திரு. கருப்பையாதாஸ் மற்றும் மூன்றாவது வார்டு உறுப்பினர் திருமதி. சுபா அவர்களின் கணவர் திரு. ராஜேந்திர பிரசாத், ஆகியோர் நகராட்சி பணிகளை ஒப்பந்ததாரராக இருந்து நடத்தியதால் மேற்படி உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்ய 15.07.2024–ல் மனு அளித்திருந்தார்.

மேற்படி மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கடையநல்லூர் நகராட்சி இரண்டாவது வார்டு உறுப்பினர் திருமதி. பூங்கோதை அவர்களின் கணவர் திரு. கருப்பையாதாஸ் மற்றும் மூன்றாவது வார்டு உறுப்பினர் திருமதி. சுபா அவர்களின் கணவர் திரு. ராஜேந்திர பிரசாத், ஆகியோர் நகராட்சி பணிகளை ஒப்பந்ததாரராக இருந்து மேற்கொண்டு வந்தது, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 32 (1) (e)-ன் படி தவறு என்பதால் மேற்கண்ட

2 வார்டு உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்வது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

12) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

கடையநல்லூர் நகராட்சியில் 2–வது வார்டு கவுன்சிலராக செயல்பட்டு வரும் திருமதி.பூங்கோதை என்பவரின் கணவர் திரு. கருப்பையாதாஸ் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பல லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொண்டுள்ளார் எனவும், 3–வது வார்டு கவுன்சிலராக செயல்பட்டு வரும் திருமதி.சுபா என்பவரின் கணவர் திரு.ராஜேந்திர பிரசாத் என்பவர் கடையநல்லூர் நகராட்சியில் பல லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை மேற்கொண்டுள்ளார் எனவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 50–ல் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில் மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்மந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்து கொள்ளக்கூடாது எனவும் மேலும் தற்போதைய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 32(1)(e)ல் மன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்த பிரிவில் மன்ற உறுப்பினர்களோ அல்லது அவருடைய இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் ஏலம் அல்லது குத்தகை எடுப்பதில் கலந்து கொள்ளக்கூடாது எனவும் தெரிவித்து, விதிமுறைகளையும் தங்களது உறுதிமொழியையும் மீறி செயல்பட்டுள்ள 2வது வார்டு மற்றும் 3வது வார்டு கவுன்சிலர்களை பதவி நீக்கம் செய்யுமாறு நகராட்சி ஆணையருக்கு மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

கடையநல்லூர் நகராட்சி இரண்டாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பூங்கோதை அவர்களின் கணவர் திரு.மு.கருப்பையாதாஸ் மற்றும் மூன்றாவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சுபா அவர்களின் கணவர் திரு.மு.ராஜேந்திர பிரசாத் ஆகியோர் 2018–2019 முதல் ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்து வெளிப்படையான இணையதள ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு ஒப்பந்த பணிகள் மேற்கொண்டு வந்துள்ளதும், கடைநயல்லூர் நகராட்சி 2–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.மு.பூங்கோதை மற்றும் 3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ரா.சுபா ஆகியோருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 32(1) (e)–ல் தெரிவித்துள்ளபடி 15 தினங்களுக்குள் எழுத்துபூர்வமாக விளக்கம் கேட்டு 06.01.2025 அன்று கடையநல்லூர் நகராட்சியால் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனடிப்படையில் மேற்படி 2–வது மற்றும் 3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்களின் கணவர்கள் தங்களது ஒப்பந்ததாரர் பதிவினை இரத்து செய்யக்கோரி கடிதங்கள் நகராட்சிக்கு அளித்ததைத் தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்த பதிவு இரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளதும், தற்போது மேற்படி ஒப்பந்ததாரர்கள் கடையநல்லூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர்களாக இல்லை என்பதும் மேற்படி உறுப்பினர்களை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 32(1) (e)-ன் கீழ்

தகுதி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருப்பது கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் கடையநல்லூர் நகராட்சி 2–வது வார்டு உறுப்பினர் திருமதி.பூங்கோதை அவர்களின் கணவர் திரு.கருப்பையாதாஸ் மற்றும் 3–வது வார்டு உறுப்பினர் திருமதி.சுபா அவர்களின் கணவர் திரு.ராஜேந்திர பிரசாத் ஆகியோர் ஒப்பந்ததாரர்களாக இருந்து கொண்டு நகராட்சி பணிகளை மேற்கொண்டு வந்தது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 32 (1) (e)–ன்படி தவறு என்பதால் மேற்கண்ட வார்டு உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்படி உறுப்பினர்களை தகுதிநீக்கம் செய்ய சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய கடையநல்லூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 20–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. வே. கணபதி பாலசுப்பிரமணியன்,
3, பவுண்டு கீழத்தெரு,
மேலகடையநல்லூர்,
கடையநல்லூர் – 627 751. தென்காசி மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி, தென்காசி மாவட்டம்.

3) திருமதி.பூங்கோதை,
2–வது வார்டு உறுப்பினர்,
கடையநல்லூர் நகராட்சி, கடையநல்லூர்.
தென்காசி மாவட்டம்.

4) திருமதி. சுபா,
3–வது வார்டு உறுப்பினர்,
கடையநல்லூர் நகராட்சி, கடையநல்லூர்.
தென்காசி மாவட்டம்.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

6) இணை இயக்குனர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்